# 12 – தமிழ் : இயல் – 5 : உரைநடை – மதராசப்பட்டினம்

இரண்டு மதிப்பெண் வினா விடை

1 . கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

- கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் சென்னையில் உள்ள பழமையான புகழ்வாய்ந்த நூலகமாகும் .
- இந் நூலகம் காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாக்கொண்டு 1869 -இல் உருவாக்கப்பட்டது
- இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டுள்ளது.

நான்கு மதிப்பெண் வினா விடை

1 . சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் , இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

- பண்டைய பண்பாட்டு அடையாளங்களில் , இன்றளவிலும் சென்னையில் பற்பல நிலைத்து நிற்கின்றன.
- சென்னை மத்தியத் தொடர் வண்டி நிலையம் , எழும்பூர் தொடர் வண்டி நிலையம் , சென்னைப் பல்கலைக் கழகம் முதலியவை இந்திய சாரசனிக் கட்டடக் கலைப் பாணியின் பழமையைப் பறைச் சாற்றுகின்றன.
- ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட ‘மெட்ராஸ் ரெக்காட் ஆப்பிஸ் ‘ , இன்றளவில் தமிழ்நாடு ஆவணக் காப்பகமாக விளங்குகின்றது
- சென்னை எழும்பூர் அருங்காட்சியகமும் , கோட்டை அருங்காட்சியகமும் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன.
- சென்னை கன்னிமாரா நூலகம் பண்டைய பண்பாட்டை விளக்கி நிற்கின்றது
- திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள் , திரையரங்குகள் முதலியன சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன

நெடு வினா -விடை

1 . ” ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு “ - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை வரைக.

<u>முன்னுரை</u> :

நான் பார்த்த நகரங்களில் தொன்மையான வரலாறும் , வடிவழகும் கொண்ட நகரம் சென்னை ஆகும். தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்றழைக்கப்படும் சென்னை தமிழகத்தின் தலைநகரமாக விளங்குகின்றது.

<u>தொன்மையான வரலாறு :</u>

- சென்னைக்கு அருகேயுள்ள அத்திரப்பாக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வானது , ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித நாகரியத்தை விளக்குகிறது

- சென்னையை ஒட்டியுள்ள கூடுவாஞ்சேரி , பல்லாவரம் , புழல் பகுதிகளில் கிடைத்த தொல்பழங்காலச் சான்றுகள் மானுடத்தின் பண்டைய வரலாற்றை விளக்குகின்றது.

- சென்னை நகரத்திலுள்ள திருவொற்றியூர் , திருவான்மியூர் , மயிலாப்பூர் , திருமுல்லைவாயில் முதலிய தலங்கள் ஆயிரம் ஆண்டுக்காலப் பழமை வாய்ந்தது.
- பல்லாவரத்தில் உள்ள குடைவரைக்கோயில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தது ஆகும்.
- கி . பி 1647 -இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் ," சென்னைப் பட்டினம் " என்ற குறிப்பு உள்ளது.

- கடந்த முன்னூறு ஆண்டுகளாக ஆங்கிலேயரின் ஆளுகைக்கு உட்பட்டு , சென்னை நகரம் சீரமைக்கப்பட்டது.

<u>வடிவழகு</u> :

- சென்னை நகரமானது தனக்கென பாரம்பரியமான வடிவழகைக் கொண்டு விளங்குகின்றது

- சென்னை மத்தியத் தொடர் வண்டி நிலையம் , எழும்பூர் தொடர் வண்டி நிலையம் , சென்னைப் பல்கலைக் கழகம் முதலியவை இந்திய சாரசனிக் கட்டடக் கலைப் பாணியில் கட்டப்பட்டு பழமையைப் பறைச் சாற்றுகின்றன.

- சென்னை எழும்பூர் அருங்காட்சியகமும் , கோட்டை அருங்காட்சியகமும் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன.

முடிவுரை :

தொன்மையான வரலாற்றையும் , வளர்ந்துவரும் நவீனத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் சென்னையின் பெருமையை அறிவோம் ! போற்றிப் பாதுகாப்போம் !

## இயல் : 5 – செய்யுள் – தெய்வமணிமாலை...

இரண்டு மதிப்பெண் வினா விடை

1 . " தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே " – தொடருக்குப் பதவுரை எழுதுக.

- அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையில் ;
- புகழ் வளரும் கந்தகோட்டத்துத் திருத்தலத்தில் ;
- அருளை வாரி வழங்கி , ஓங்கி நிற்கும் கந்தவேளே ! முருகப் பெருமானே!

என்று பொருள் கொள்ளலாம்.

நான்கு மதிப்பெண் வினா விடை

1 . இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்.

- " ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும் " – என்று இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் கேட்கிறார்.
- ஒரு நெறிப்பட்ட மனதுடன் , இறைவனின் திருவடிகளை நினக்கின்ற உத்தமர்களின் உறவு வேண்டும்.

- மனதில் ஒன்று வைத்துக்கொண்டு , வெளியே மற்றொன்றைப் பேசும் வஞ்சகர்களின் உறவு தன்னைப் பற்றா வகையில் காக்க வேண்டும் ! என்று இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் வேண்டுகின்றார்.

## இயல் : 5 – செய்யுள் - தேவாரம்...

இரண்டு மதிப்பெண் வினா விடை....

1 . கலிவிழா , ஒளிவிழா – விளக்கம் தருக

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத்தில் , மயிலாப்பூர் இறைவனுக்கு நடைப்பெற்ற கலி விழா , ஒலி விழா பற்றி குறிப்பு உள்ளது.

<u>கலி விழா</u> ;

- எழுச்சி தரும் விழா
- மக்களுக்கு எழுச்சி தந்து , மகிழ்ச்சியூட்டும் வகையில் உற்சாகத்துடன் கொண்டாடப்படும் விழா கலி விழா எனப்படும்.

<u>ஒலி விழா</u> ;

- ஆரவார விழா.
- மங்கல வாத்தியங்களின் இனிய இசை , வாழ்த்துப் பாடல்களின் இனிய இசை ஆகியவற்றின் ஒலி ஆரவாரத்துடன் கொண்டாடப்படும் விழா ஒலி விழா எனப்படும்.

நான்கு மதிப்பெண் வினா விடை

1 . பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார் ?

- சென்னை திருமயிலாப்பூரில் உள்ள புகழ்பெற்றக் கோயில் கபாலீச்சுரம்.
- இக்கோயிலில் நடைப்பெறும் பல்வேறு விழாக்களில் பங்குனி உத்திர விழா சிறப்பானது.
- இவ் விழாவை இளம்பெண்கள் ஆரவாரத்துடன் கொண்டாடுவார்கள்.
- எழுச்சி மிகுந்த கலி விழாவாக நடைப்பெறும்
- கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குத் திசைதோறும் பூசையிடும் வகையில் பங்குனி விழா கொண்டாடப்படும்.
- இவ் விழாவானது மிகுந்த ஆரவாரத்துடன் அனைவராலும் கொண்டாடப்பட்டது என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

நெடு வினா :

1 . சென்னையில் உள்ள மயிலாப்பூர் , கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன ?

**<u>கந்த கோட்டம் :</u>**

- சென்னை கந்தகோட்டத்தினைப் பற்றி இராமலிங்க அடிகளார் , திருவருட்பாவில் தெய்வமணிமாலை எனும் பதிகத்தில் பாடியுள்ளார்.
- நம் பாடப் பகுதியாக உள்ள “ ஒருமையுடன்....” எனத் தொடங்கும் பாடலில் “தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர் தலம் ஓங்கு கந்தவேளே ! “ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- சென்னையானது அறம் செய்து , புண்ணியச் செயல்களில் ஈடுபடுபவர்கள் நிறைந்திருக்கும் ஊராகும் என்பதை அறியலாம்.

<u>**மயிலாப்பூர் :**</u>

- சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரம் கோயில் பற்றி திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பாடியுள்ளார்.
- மயிலாப்பூர் கபாலீச்சரம் கோயிலில் பற்பல விழாக்கள் கொண்டாடப்பட்டன.
- எழுச்சி மிகுந்த கலி விழாக்கள் நடைப்பெற்றன.
- கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குத் திசைதோறும் பூசையிடும் வகையில் பங்குனி விழா கொண்டாடப்பட்டது.

இவ்வாறு பல்வேறு விழாக்கள் மயிலாப்பூரில் கொண்டாடப்பட்டன.

மேலும் ,

- ” மடலார்ந்த தெங்கின் மயிலை...!”
- ” கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சுரம்..!”
- ” கற்றார்கள் ஏத்தும் கபாலிச்சரம்...!”

என்றெல்லாம் மயிலாப்பூர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## இயல் – 5 : செய்யுள் – அகநானூறு

இரண்டு மதிப்பெண் வினா விடை :

1 . “ பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் ” – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக

- பாடலில் எதிர்ச்சொல் அமைந்து வருவது முரண் தொடை எனப்படும்.
- ” பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் “ – எனும் தொடரில் அமைந்துள்ள முரண் நயங்கள் வருமாறு;

பெருங்கடல் x சிறுகுடி .

நான்கு மதிப்பெண் வினா விடை

1 . “ நெல்லின் நேரே வெண்கல் உப்பு “ – இத்தொடரின் வழியே பண்டமாற்று வணிகத்தை விளக்குக .

- அம்மூவனார் எழுதிய அகநானூற்றுப் பாடலில் , ”நெல்லின் நேரே வெண்கல் உப்பு” எனும் வரி வரி இடம்பெற்றுள்ளது.
- கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் உப்பங்கழிகளில் உப்பை விளைவித்தனர்.
- அவ் உப்பை வண்டியில் ஏற்றிச் சென்று , மருத நிலத்தில் வாழும் மக்களிடம் கொடுத்துவிட்டு , அதற்கு நிகரான நெல்லைப் பெற்றுக்கொண்டனர்.

இதன் மூலம் சங்க காலத்தில் ; தன்னிடம் உள்ள விளைப் பொருட்களைக் கொடுத்துவிட்டு , அதற்குப் பதிலாகத் தனக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொண்ட பண்டமாற்று முறை இருந்தமை புலனாகிறது.

# இயல் : 5 - துணைப்பாடம் – தலைக்குளம்...

நெடு வினா :

1 . " கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன " – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

- வளர்ந்து வரும் தொழில் நுட்ப நாகரியத்தாலும் , பருவநிலை மாற்றத்தினாலும் கிராமங்கள் தங்கள் அடையாளங்களை இழந்து வருகின்றன.
- கிராமங்கள் என்றவுடன் , நம் அனைவரின் நினைவுக்கும் வருவது பச்சைப்பசேல் என்ற வயல்வெளிகள்தான். ஆனால் , இன்றளவில் பெரும்பாலான கிராமங்கள் இந்த அடையாளத்தை இழந்துவிடுகின்றன.
- கிராமங்களிலிருந்து நகரத்திற்குப் பற்பலர் இடம்பெயர்ந்ததால் , கிராமங்களில் வேளாண்மை வேலை செய்ய ஆட்கள் இல்லை.
- கிராமங்களின் முக்கிய சாலைகளை ஒட்டியிருந்த வேளாண்மை விளை நிலங்கள் எல்லாம் , மனைகளாக மாறிவிட்டன.
- இயற்கையான விவசாய நிலங்கள் குறைந்தது மட்டுமின்றி கிராமங்களில் இருந்த குளங்கள் , ஏரிகள், ஆற்றங்கரைகள் அழிக்கப்படுகின்றன.
- பெருவாரியான மக்கள் நகரத்தினை நோக்கி நகர்ந்ததால் , கிராமத்து அடையாளங்களான மாட்டுத் தொழுவங்கள் , ஆட்டுப் பட்டிகள் , கோழிக் கூடுகள் முதலியன காணாமல் போய்விட்டன.
- விதைக்காக நெல்லைச் சேமித்து வைக்கும் கோட்டை , சாப்பாட்டிற்காக நெல்லைச் சேமித்து வைக்கும் பத்தாயம் முதலியன காணாமல் போய்விட்டன.
- வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்பதற்காக அமைக்கப்பட்டிருந்த திண்ணைகள் இன்றளவில் காணாமல் போய்விட்டன.
- கிராமத்து விழாக்களில் முதன்மைப்படுத்தப்பட்ட கராகாட்டம் , உயிலாட்டம் , வள்ளித் திருமண நாடகங்கள் இன்றளவில் காணாமல் போய்விட்டன.
- இவ்வாறாக நாகரீகம் என்ற பெயரில் பாரம்பரியமான கிராமங்கள் தங்கள் முகவரிகளை இழந்துவருகின்றன.
- படித்த மாணவர்களாகிய நாம் , இழந்த கிராமத்துப் பண்பாட்டை மீட்டெடுப்போம் ! ; இயற்கையோடு இயைந்து வாழ்வோம் !

---